திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, இதே மாதிரி மணல் அதிகமாக உள்ள இடம் பெரியகுளம் தாலுகாவில் போடிக்கும் தேவாரத்திற்கும் இடையில் உள்ள ரோடில் மணல் காற்றில் வந்து மூடிக் கொள்ளும். அங்கே மரங்களை வைத்து பயிர் செய்து மணல் வராமல் தற்போது தடுத்திருக்கிறார்கள். ரோடில், தார் போடுவதால், மணல் உருண்டு போய்விடுகிறது. மரங்களை வைப்பதால், மணல் தடுக்கப்படுகிறது. இந்த மாநிலத்திலேயே மதுரை ஜில்லாவில் அது நடந்திருக்கிறது என் பதைத் தெரிவித்துக் கொண்டு அதைப் பார்த்து அவ்விதம் செய்ய அரசு முயலுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இப்போது அந்த சாலையில் தார் போடப்படுகிறது. கடற்கரையை ஒட்டி ஒரு பகுதி செல்கிறது. மணல் அதிகமாக வருகிறது. ஓரங்களில் செடிகளை வைப்பதால், மணலைத்தேக்கிக் கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறது. அதைப் பின்பற்றுகிறார்கள்.

Social Education Organisers.

*** 75. *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—**

(*a*) the number of Social Education Organisers employed in the Panchayat Unions in the State ; and

(*b*) among them, the number of Social Education Organisers (i) who have teachers' training qualification and (ii) who do not possess the minimum S.S.L.C. pass qualification ?

சமூகக் கல்வி அமைப்பாளர்கள்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் சமூகக் கல்வி அமைப்பாளர்களின் எண்ணிக்கை என்ன ?

(இ) அவர்களுள் (1) ஆசிரியர் பயிற்சித் தகுதி பெற்றோர், (2) குறைந்த அளவு பள்ளியிறுதி ஆண்டுத் தேர்வுத் தகுதி பெறாதவர்களின் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) அண்டு (இ) விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இவர்களை எஸ்.இ.ஒ. என்று சொல்கிறபடியால், டி.இ.ஒ., சி.இ.ஒ., என்பது போல பெரிய அதிகாரிகள் என்ற தப்பான அபிப்பிராயம் இருக்கிறது. எஸ்.இ.ஒ. என்று சொல்லக் கூடிய பஞ்சாயத்து யூனியன் கல்வி அதிகாரிகளில் எஸ்.எஸ். எல்.சி. தாண்டாதவர்கள் பலர் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். ஆகையால் அவர்களுக்கு எஸ்.இ.ஒ. என்ற பெரிய பெயரை மாற்றி கல்வி அலுவலர், கல்வித் தொண்டர், மேற்பார்வையாளர், சூபர் வைசர் என்பதைப் போன்று வைக்க அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : பெயரால் ஏற்படுகிற மாறுபாடு அதிகமில்லை. என்றாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் கருத்து ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது—என்று கருதுகிறேன். இப்போது அவர்கள் எஸ்.இ.ஒ. என்று அழைக்கப்படுவதில்லை. இ.ஒ. (எஜுகேஷன்) என்று, "எக்ஸ்டென்ஷன் ஆபீஸர் ஃபார் எஜுகேஷன்" என்று அழைக்கப்படுகிறார்கள் இப்போது.

Separate Department at District Level for District Development Councils, Community Development Projects, etc.

*** 76. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to constitute a separate Department at the District level for attending to the works of Panchayats, Panchayat Unions, District Development Councils, Community Development Projects, etc ?**

27th January 1970]

மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள், சமுதாய நலத்திட்டங்கள் ஆகியவற்றிற்கு மாவட்ட அளவில் தனி இலாகா.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள், சமுதாய நலத் திட்டங்கள் ஆகியவற்றின் பணிகளுக்கென மாவட்ட அளவில் தனி இலாகா ஒன்றை நிறுவும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : இல்லை.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : முன்னொரு முறை இதே சபையில் அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, இந்தக் கோரிக்கை மீது தங்களுக்கு அனுதாபம் இருப்பதாகவும், அது சம்பந்தமாக யோசித்துக் கொண்டிருப்பதாகவும் கூறினார்கள். அதற்குப் பின்னர் பல இடங்களில் இந்தத் துறையில் உள்ள அலுவலர்கள் தங்களுக்குத் தனி இலாகா வேண்டுமென்று கோரிக்கை வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் அதற்கான முடிவை மேற்கொள்ள அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : தலைவர் அவர்களே, இதற்கான செயல் குறிப்பு அரசாங்கத்திடத்தில் இல்லை என்றுதான் பதிலாகச் சொல்லியிருக்கிறேன். பல்வேறு இடங்களிலிருந்து அலுவலர்கள் தனி அமைப்பு ஏற்பட வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். அதுபற்றி கிராம வளர்ச்சி நெறியாளர் அரசாங்கத்திற்கு ஒரு குறிப்பு அனுப்பியிருந்தார்கள். அதன் பேரில் மாவட்ட ஆட்சியாளர்கள் தங்கள் கருத்துக்களைத் தருமாறு கேட்கப்பட்டார்கள். அதில் மூன்று பிரிவுகள் அடங்கியிருந்தன. (1) பிராந்திய துணை கிராம வளர்ச்சித்துறை இயக்குநரை நியமித்தலும் அவர்களுக்கு சில அதிகாரங்களை வழங்குதலும், (2) மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் அவரது ஊராட்சி அபிவிருத்திக்கான நேர் உதவி அலுவலருக்கும் அதிக அதிகாரங்களை வழங்குதல், (3) மாவட்ட ஆட்சியாளரின் ஊராட்சி அபிவிருத்திக்கான நேர் உதவி அலுவலர் பதவியின் பெயரை மாவட்ட அபிவிருத்தி அதிகாரி என்று மாற்றுவது என்ற மூன்று குறிப்புகள் அனுப்பியிருந்தார்கள். அவற்றின் பேரில் மாவட்ட ஆட்சியாளர்கள் கருத்தைக் கேட்டபோது, பெரும்பாலானவர்கள் தங்களுக்கும் நேர்முக உதவியாளர்களுக்கும் அதிக அதிகாரங்கள் வழங்குவது பற்றி ஒப்புதல் அளித்துள்ளார்கள். ஆனால் சில மாவட்ட ஆட்சியாளர்கள் பிராந்திய உதவி கிராம வளர்ச்சித் துறை இயக்குநரை நியமனம் செய்வதை ஆட்சேபித்துள்ளார்கள். அதிக அதிகாரங்கள் கொடுப்பதைப் பற்றியும் அந்த இலாகா சீரமைப்பது பற்றியும் அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. உறுப்பினர் சொல்லியதைப் போல, விரைவில் தீர்வு காண மாநில ஊராட்சி வளர்ச்சி இயக்குநர் குறிப்புக்கு மீண்டும் அனுப்பப் பட்டிருக்கிறது. பதில் வந்த பிறகு திட்டங்களைப் பரிசீலிக்கலாம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : இந்த முடிவிற்கு எதிரான கருத்துக் கொண்டவர்களாக வருவாய்த் துறையினர் இருப்பதால், அவர்களை அன்றி வேறு துறையில் அனுபவம் வாய்ந்தவர்களின் கருத்துக்களைக் கேட்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : வருவாய்த் துறையில் கீழ் மட்டத்தில் இருக்கிற சிலர் தங்களுக்கு இடம் வேண்டுமென்று கேட்கிறார்களே தவிர, மாவட்ட ஆட்சியாளர்கள் போன்ற மேல் நிலையில் இருக்கிறவர்கள் நியாயமான பரிகாரம் காண விரும்புகிறார்கள். தனி நிபுணர் அமைக்கத் தேவையில்லை. பிரத்யட்சமாக அதில் உள்ள சங்கடங்கள் நமக்குத் தெரிவதால், அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியும். இப்போதே வருவாய்த் துறையில் உள்ளவர்கள் கணிசமான அளவுக்குக் குறைக்கப்பட்டு இதில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது.